OS.No.118/2021

Dated : 02.01.2024

Time: 12.10 p.m to 12.15 p.m

P.W-1 சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4-10 பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை.

குறுக்கு விசாரணை

1) தாவா சர்வே எண்கள். 836/9 ஆகும். மேற்படி சொத்து சம்மந்தமாக கணிணி பட்டாவில் என் பெயர் நீக்கப்பட்டது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட வருவாய் அதிகாரிகளிடம் நான் புகார் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். ஆனால் அந்த மனு நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கணிணி பதிவேட்டில் என் பெயர் நீக்கப்பட்டது சம்மந்தமாக வருவாய் கோட்டாசியரிடம் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

2) 2014 வரை தாவா சொத்து வருவாய் ஆவணம் என் தகப்பனார் பெயரையும் உள்ளடக்கி இருந்தது. அவர் இறப்பிற்கு பிறகு எங்கள் பெயர் சேர்க்கப்படவில்லை. மேற்படி கோட்டாசியரிடம் மேல் முறையீடு செய்யாமல் நான் நேரடியாக தாக்கல் செய்துளள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே 4 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

மறுவிசாரணை

மேற்படி கோட்டாசியரிடம் மனு கொடுத்து அதில் எங்கள் பெயர் சேர்க்கவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறுக்கு விசாரணை

அது போல் எந்த உத்தரவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யாமல் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**